بسم الله الرحمن الرحيم

**Friday Sermon / வெள்ளிக்கிழமை குத்து.ஃபா**

**27 April 2018 (10 Shabaan 1439 A H)**

# Thanks-Giving to Allah & Advices (Part 3)

## இறைவனுக்கு நன்றியும் உங்களுக்கு சில அறிவுரைகளும் (பகுதி – 3)



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவ்வுதும், அல்.ஃபாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.ஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு தம் ஜும்மா பேருரையினை ஆரம்பித்தார்.

**அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ்**. ஜமாஅத்தைச் சார்ந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் அளித்து வருகின்ற அறிவுரையின் மூன்றாம் பகுதியை தொடர்ந்து ஆற்றி கொள்வதற்கான அறிவு மற்றும் வாய்ப்பினை அல்லாஹ் எனக்கு வழங்கியிருக்கின்றான். இது அல்லாஹ்வின் மாபெரும் அருட்களில் ஒன்றாகும். அவன் என்னை தனது பிரத்தேகமான அன்பு மற்றும் அருட்கள் கொடைகளால் வழிநடத்திக் கொள்கின்றான். நமது ஜமாஅத்தைச் சார்ந்த உறுப்பினர்களுக்கும் முழுமானிட குலத்திற்கும் நல்ல வாழ்வுக்கான

முக்கிய சாராம்சத்தை கற்பிப்பதற்கும், ஆன்மீக வாழ்கையை சிறந்த முறையில் வடிவமைப்பதற்கும், அதைப் போன்றே ஆன்மீகம் மற்றும் பௌதீகம் ஆகிய இரண்டும் ஒன்றுக் கொன்று மோதாமல் ஒற்றுமையுடன் இருப்பதர்க்கான உபதேசங்களை அளிப்பதற்கும் அவன் எனக்கு அருள் புரிந்திருக்கின்றான். நிச்சயமாகவும் எல்லா புகழும், என்னை கற்பிக்கவும் வழிநடத்திடவும் செய்கின்ற அல்லாவுக்கே ஆகும். இவ்வுலகிலான உங்கள் வாழ்க்கையை சிறந்த முறையில் வடிவமைப்பதற்கும் அத்துடன் மறு உலக வாழ்கையை அடைந்து விடுவதற்கும் ஆன அறிவுரைகள் இதில் உள்ளன. நிச்சயமாகவும் அல்லாஹ்வின் மீதான என் அன்பு அனைத்து எல்கைக்கும் அப்பாலாகும்.

என் அன்பு தோழர்களே, உலகனைத்திலுமுள்ள முஸ்லீம்களே, பிற மக்களே, இன்றைய என் பிரசங்கத்தின் இதயத்தின் பால் நான் வருகிறேன். பெண்களுக்கு எதிராக இன்றைய சமூகத்தில் தொடர்ந்து வரும் கொடுங்கோன்மை மற்றும் ஒடுக்குமுறை ஆகியவை பெருந்துயரம் விளைவிப்பவையாகயிருக்கின்றது. இது இஸ்லாமின் முகத்திலிருக்கும் கறைகளை அகற்றவேண்டிய நேரமாகும். ஆண்களின் மேலாதிக்கத்திற்கு எதிராக பெண்கள் தங்களுக்காக விடுதலை இயக்கங்களை ஆரம்பித்து இஸ்லாமிய வட்டாரத்திற்கப்பால் வேறு வழிகளைத் தேடிச் செல்கின்ற சூழ்நிலைகள் உருவாகியிருக்கின்றது. இத்தகைய சூல்நிலைகள் உருவாகியதற்கு முழுமையான காரணம் கணவர்கள் மட்டும் தான். இந்த வகுப்பின் கீழ் உள்ள அனைத்து ஆண்களும் இந்த கடுமையான வீழ்ச்சிக்காக இறைவனிடம் கணக்கு கொடுக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. பெண்களுக்கு எதிராக தவறான சிந்தனை மற்றும் அடக்குமுறை ஆகியவை இன்று வெவ்வேறு தரத்தில் நிகழ்ந்து வருகின்றது. இத்தகைய நிகழ்வுகளை அனைத்தும் முழுமையாக தொகுக்கப்பட்டால் அது ஒரு மிகப்பெரிய நூல் ஆகிவிடும்.

ஜமா அத்துச்சஹீஹில் இஸ்லாம் ஒரு சமுதாயமாகும். இஃது அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்றவாறு இஸ்லாமிய வாழ்கை முறைகளை பின்பற்றி உலகிற்கு முன்மாதிரியாக திகழ்வதர்க்கு இறைவனால் தோற்றுவிக்கப்பட்டவர்களின் சங்கம். நாம் கல்வி துறையில் பாரட்டத்தக்க முன்னேற்றம் அடைந்திருக்கின்றோம். இஸ்லாமிய போதனையின் அடிப்படைதத்துவத்தை விளக்கி மிக அழகான சொற்பொழிவுகள் நமக்கு வழங்கிக்கொள்ள முடியும். ஆனால் நம் வார்த்தைகள் நம் உறுதியான

செயல்களால் பொருந்தாவிட்டால் உலகம் நமக்கு எந்த மதிப்பும் அளிப்பதில்லை. நினைவில் கொள்ளுங்கள் நம் அன்புக்குரிய தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் திருக்குர்-ஆனின் நடைபயிற்சி என அறியப்பட்டார். ஏன் அவ்வாறு அவர் அழைக்கப்பட்டார்? ஏனெனில் அவர் கற்பித்த இறைபோதனைகள் அவருடைய அன்றாட வாழ்க்கையில் பிரதிபலித்தது. அவர் ஒரு சிறந்த உதாரணமாக இருந்தார். அவர் பூமியில் திருக்குர்-ஆனின் உருவமாக திகழ்ந்தார். ஆகையால் நாம் எப்போதும் அன்னாரின் அடிச்சுவடுகளை பின்பற்ற வேண்டும். நாம் போதிக்கும் இஸ்லாமிய கருத்துக்கள் படி நம் வாழ்க்கையை அமைக்கவேண்டும். தூதர்(ஸல்)அவர்கள் போதித்த, அன்னார் வாழ்ந்து காட்டிய அதே இஸ்லாமிய பாதையை நாம் பின்பற்ற வேண்டும். இப்போது என் விஷயத்திற்கு நான் திரும்புகின்றேன். இஸ்லாமிய சமுதாயத்தில் பெண்களின் நிலை மிக சிக்கலாக உள்ளது. அடிப்படையான மனித உரிமைகளை புறக்கணித்து, இரக்கம் மற்றும் நற்குணம் ஆகிய மனோபாவங்களுடன் சமூகத்தில் வாழ்ந்துக் கொள்வதற்கான இயல்பு இல்லாமல் இருப்பவர்களை உண்மையான முஸ்லீம்களின் வகுப்பில் உட்படுத்திட இயலாது. தனிப்பட்ட வாழ்க்கையில் ஒரு நபர் பொறுமையற்றவராகவும் கொடுமை செய்பவராகவும் இருந்து பெண்களிடம் வன்முறையாக நடந்துக் கொள்ளவும் செய்தால் அந்நபர் ஒரு உண்மையான முஸ்லீமைப் போன்று சொர்க்கத்தில் நுழைந்து விடலாம் என்று எண்ணுகின்றார் என்றால் அந்த எண்ணிக்கை துரதிருஷ்டவசத்தால் தவறானதாகும். பிரார்த்தனை செய்தாலும் இல்லாவிட்டாலும் சரி அத்தகைய இயல்பைக் கொண்டவர் ஒருபோதும் சொர்க்கத்தில் நுழைவதில்லை. அவர் சொர்க்கத்தில் நுழைந்து விடுவார் என்றும் இறைவனிடமும் பக்திவழியிலும் நெருங்கிய பந்தத்தை வைத்திருக்கின்றார் என்றும் சுயம் அவருக்கு பெருமை கொள்ளலாம். ஆனால் அவரது தீய செயல்கள் அவர் செய்யும் அனைத்து பிரார்த்தனைகளையும் முற்றிலுமாக அழித்துவிடும். அவரது முன்னால் சொர்க்கக்கதவை இறைவன் அடைத்துவிடுவான்.

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான ஊழியர்களுக்காக மட்டுமே சொர்க்கம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. நமது சமூகத்தில் சிறிய வருமானத்தில் வாழ்ந்து வருகின்ற குடும்பங்கள் உள்ளன. அவர்களில் பெரும்பாலோர் மிக பெரிய வறுமையிலும் நெருக்கடியிலும்

இருக்கின்றனர். குழந்தைகள் பிறக்கின்றனர். ஆனால் அடிப்படையான தேவைகளைக்கூட நிறைவேற்றுவதற்கு போதுமான பணம் அவர்களிடம் இல்லாத நிலை. ஏழை பெண்களும் பிள்ளைகளும் இரவுகளில் தூங்க முடியாத சூழ்நிலை. ஏனென்றால் கொசுக்களின் கும்பல் இரவு முழுவதும் அவர்களை சுற்றி சுற்றி தொந்தரவு கொடுக்கின்றது. இது எல்லாவற்றிற்கும் மேலாக அடிக்கடி தோன்றும் தொற்று நோய்கள். மட்டுமின்றி ஏழை வர்க்கங்களுக்கிடையே பெரிய அளவிற்கு உயிரிழப்பும் நிகழ்கின்றது.

அவர்களின் கணவன்மார்கள் இரக்கமுள்ளவர்களாக இருந்தாலும் கூட ஏழை பெண்கள் அதிகமளவிற்கு பாதிக்கப்படுகின்றனர். கஷ்டம் மற்றும் வறுமை பல்வேறு வகையில் தொடர்ந்து அவர்களை பாதிக்கின்றது. நாள் முழுவதும் நீண்ட பராமரிப்பு கடமைகள். நோயுற்றுள்ள குழந்தைகளை பராமரிப்பதோடு ஒரு நிமிடம் கூட ஓய்வெடுக்காமல் இரவு முழுவதும் விழித்திருக்கின்றனர். எந்த ஒரு தரப்பில் பார்த்தாலும் சரி அது ஒரு கடினமான வாழ்க்கையாகும். துன்பம் மற்றும் துயரங்கள் எஞ்சுகின்ற வாழ்க்கை நமது சமூகத்தில் ஒரு உண்மையாகும். நம்முடைய சமுதாயத்தில் நிலவுகின்ற இந்த அருவருப்பை முடிவுக்கு கொண்டு வர இறைவன் நமக்கு துணைபுரியட்டும். இத்தகைய ஒரு சூழ்நிலையில் நன்றியுடனும் அன்புடனும் நடந்துக்கொள்ள வேண்டும் என்பது கணவர்களின் அடிப்படையான ஒரு கடமையாகும். அதற்கு மாறாக தனிப்பட்ட வாழ்க்கையில் மனைவியர்களிடம் தடி – அடி முறைகளுடன் ஒரு சர்வாதிகாரியைப் போன்று நடந்துக்கொள்வது உண்மையில் மனிதர்களா? இத்தகைய பருமாற்றங்கள், காயப்பட்டவரை அவமானப்படுத்துவதற்கு சமமல்லவா? சில புருஷர்கள் தங்கள் மனைவியரை முறைகேடான செயல்களில் குற்றம் சாட்டுகின்றார்கள். ஆனால் அதே சமயம் அவர்கள் அசாதாரணமான உறவுகளை வைத்துக் கொள்ளவும் செய்கின்றனர். வழக்கமாக இடைவேளைகளில் குழந்தைகள் பிறந்துக்கொண்டுமிருக்கும். சொந்த மனைவிகளுக்கு வேதனையளிப்பதோடு பூமியில் அவர்களுக்காக நரகத்தை உருவாக்கும் இத்தகைய கணவர்களை மனிதர்களாக எண்ண முடியாது. அவர்களுக்கு இஸ்லாமுடன் எந்த பந்தமும் இல்லை. நான் உங்கள் அனைவருக்கும் எச்சரிக்கை விடுக்கின்றேன். இத்தகைய நபர்களுக்கு ஜமா அத்துச் சஹிஹீல் இஸ்ஸாமுமாக எந்த தொடர்பும் இல்லை. இந்த ஜமா அத்துடன் உள்ளபூர்வமான பந்தமும் உறவும் இத்தகைய நபர்களுக்கு முன்பே

இருந்தால் கூட! இத்தகைய நபர்கள் இந்த ஜமா அத்தின் முன்னிலையில் இருக்கின்றார்கள் என்பதால் எந்த பலனும் இல்லை. நினைவில் கொள்ளுங்கள். ஜமா அத்து சஹீஹில் இஸ்லாம் நம் காலத்தில் இஸ்லாமிற்கு புது உயிரினை அளிப்பதற்கு தோன்றியதாகும். நீங்கள் உண்மையான முஸ்லீமாக மாறிடுவதற்கு இஸ்லாமிய போதனைகளின் மீது உறுதியான நம்பிக்கையுடன் நிலைக் கொள்ளுங்கள். வழி தவறி செல்லாமலிருக்க பொறுமையுடனும் கவனத்துடனும் முன் எச்சரிக்கையுடன் செயல்படுங்கள்.

நான் மேல்கூறிய தரத்தில்பட்ட நபர்களிடம் நான் குறிப்பாக கூறுகின்றேன். மிக விரைவில் நீங்கள் ஒரு சீரமைப்பை உங்களில் ஏற்ப்படுத்துங்கள். அதைப்போன்று உலகெங்குமுள்ள நம் ஜமா அத்து உறுப்பினர்களுக்கும் நான் எச்சரிக்கை விடுக்கின்றேன். நீங்கள் உங்கள் மனைவியிடமும் குறிப்பாக பெண்களிடம் மதிப்புடனும் மரியாதையுடனும் நடந்துக் கொள்ளாத இதயமில்லாதவர்களைப் போன்று ஆகக் கூடாது. நம் ஜமா அத் உண்மையான இஸ்லாமிற்காக நிலை கொள்ளுகின்றது என்பதை மறவாதீர்கள். நினைவில் கொள்ளுங்கள். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் என்பது உண்மையான இஸ்லாமை பிரதிநிதித்துவம் செய்கின்றது. இந்த ஆன்மீக சீரமைப்பு வழியிலிருந்து மிக உயர்ந்த தகுதி பெற்ற முன் மாதிரியாக திகழும் நபர்கள் உற்பத்தியாக வேண்டும். இறுதி வெற்றி அல்லாமல் ஒருபோதும் நமக்கு கிடைப்பதில்லை. ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் எனும் இந்த அருளுக்குரிய சங்கத்துடன் தீமையின் உருவங்களை இணைக்க நமக்கு தைரியமோ அனுமதியோ இல்லை.

எல்லாம் வல்ல இறைவன் உண்மையான வழியில் நாம் அனைவரையும் வழி நடத்துவானாக! அது வாயிலாக உண்மையான முஸ்லீம்களாக நாம் மாறிடட்டும். இன்ஷா அல்லாஹ் ஆமீன்.


Translated by
*Azim Ahmad*
Email: azimahmad070@gmail.com
**Phone :** 9789180817



**ISSUED BY:**

**R. JAMALUDDIN RAOTHER**
Amir Kerala South Zone, India
Jamaat Ul Sahih Al Islam
Email : jamal.raother@gmail.com
**Phone:** 9447001832,04752252663
**Blog:** www.sahih-al-islam.blogspot.in